பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 10 2023 **THURSDAY** 12 40 **PM**

வணக்கம் - ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி ராஜஸ்தான் மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைத்தார்.

2. நாட்டில் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை கடந்த ஒன்பதாண்டுகளில் சாதனை அளவை எட்டியுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

3. உலக முதலீட்டாளர்கள் மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம், நடைபெறும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. பிஜேபி மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் கூட்டம் சென்னையில் நடைபெற்று வருகிறது.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில், இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி ராஜஸ்தான் மாநிலத்தில் ஐயாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைத்தார்.

ஜோத்பூரில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் 350 படுக்கை வசதி கொண்ட அவசரகால விபத்து சிகிச்சை மையத்துக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான ஏழு அவசரகால மருத்துவ பிரிவுகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

ஜோத்பூர் விமான நிலையத்தில் அதிநவீன புதிய முனையம்,

ஜோத்பூர் ஐ ஐ டி-யில் ஆயிரத்து 135 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மையம் மற்றும் மாநிலத்தில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்தில் புதிய பிரிவுகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

மற்றும் மாநிலத்தில் 145 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள இரட்டை ரயில் பாதையையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

பிற்பகல் மத்தியப்பிரதேசம் செல்லும் அவர், அங்கு 12 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

அம்மாநிலத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு சாலைத் திட்டங்களையும் அவர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

ரயில்வே கட்டமைப்பை மேம்படுத்தும் ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பிலான 2 திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

மும்பை – நாக்பூர் – ஜர்சுகுடா இடையிலான எரிவாயு குழாய் இணைப்புத் திட்டத்தின்கீழ் நாக்பூர் – ஜபல்பூர் பிரிவுக்கும் அவர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

ஜபல்பூரில் அமைக்கப்பட்டுள்ள புதிய எரிவாயு நிரப்பும் ஆலையையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

>>>>><<<<<

நாட்டில் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை கடந்த ஒன்பதாண்டுகளில் சாதனை அளவை எட்டியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் இன்று அருட்பிரகாச வள்ளலாரின் 200வது பிறந்த நாளை ஒட்டி, திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து அவர் பேசினார்.

சமத்துவ சன்மார்க்க சமுதாயத்தை உருவாக்க வள்ளலார் விரும்பினார் என்றும் அவர் கூறினார்.

வள்ளலார், மகளிர் மசோதாவை வரவேற்றிருப்பார் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி கலந்து கொண்டு வள்ளலாரின், சிலைக்கு மாலை அணிவித்து அணையா விளக்கின் தீபச்சுடரையும் ஏற்றி வைத்தார்.

இவ்விழாவில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்து கொண்டார்.

இந்நாளையொட்டி, உலகெங்கும் உள்ள சுத்த சன்மார்க்க அன்பர்கள் திருவருட்பா பாடல்களை பாடி வள்ளலாரின் பிறந்த நாளை கொண்டாடி வருகின்றனர். மாநிலத்தில் அரசு சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

>>>>><<<<<

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர், இரண்டு நாள் இளைஞர் திருவிழாவை சத்திஷ்கர் மாநில தலைநகர் ராய்ப்பூரில் தொடங்கி வைத்தார்.

இந்த விழாவில், 28 மாவட்டங்களைச் சேர்ந்த 500 இளையோர் கலந்து கொண்டுள்ளனர்.

இதில், ஓவியம், கவிதை, கைபேசி படப்பிடிப்பு, பேச்சுப்போட்டி, நடனப் போட்டிகள் ஆகியவை நடைபெறுகின்றன.

மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுவோர், தேசிய அளவில் நடைபெறும் இளையோர் விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பை பெறுவார்கள்.

இந்த நிகழ்ச்சியில், ஊடகத்திற்கான செயலியை திரு. அனுராக் தாக்கூர் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, இன்று பீகார் மாநிலம் செல்கிறார்.

ஜனசங் மற்றும் பிஜேபியின் தலைவர்களில் ஒருவராக இருந்த கைலாசபதி மிஸ்ரா-வின் நூற்றாண்டு விழாவில் அவர் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

பின்னர், அம்மாநில பிஜேபி தலைவர்களுடன் திரு. ஜெ.பி. நட்டா ஆலோசனை நடத்தவுள்ளார்.

>>>>><<<<<

பிஜேபி மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் கூட்டம் சென்னையில் நடைபெற்று வருகிறது.

இந்த கூட்டத்தில் கட்சியின் அமைப்பு பொதுச்செயலாளர் திரு. கேசவ விநாயகம் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், தேர்தலில் பிஜேபி தனித்து போட்டியிடுவது புதிதான ஒன்றல்ல என்றும் ஏற்கனவே பலமுறை தனித்து போட்டியிட்டுள்ளதாகவும் கூறினார்.

புதிதாக எழும் சவால்களை தொண்டர்கள் எதிர்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

உலக முதலீட்டாளர்கள் மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம், சென்னையில் நடைபெறும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை போரூரில் தனியார் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மையத்தை இன்று அவர் தொடங்கி வைத்தார்.

தொழில்துறையில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு தமிழக அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த மையம் தொடங்கப்பட்டதன் மூலம் 2 ஆயிரத்து 500 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2030ஆம் ஆண்டுக்குள் தமிழகம் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை எட்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - முதலமைச்சர் 42 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

வரி ஏய்ப்பு செய்ததாக பெறப்பட்ட புகாரின் பேரில் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜெகத்ரட்சகனுக்கு சொந்தமான 40 இடங்களில் வருமான வரித்துறையினர் இன்று சோதனை நடத்தி வருகின்றனர்.

வருமான வரித்துறையினரின் இந்த சோதனை நடவடிக்கைக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மத்திய அரசின் தீன்தயாள் கிராமின் கௌசல்யா யோஜானா திட்டம் நாடுமுழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலத்தை மையப்படுத்தி பெரியார் பல்கலைக் கழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் வாயிலாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பெற்று வருவதாக பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஜெகந்நாதன் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் - ஜெகந்நாதன் 23 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதன் காரணமாக, தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் இரண்டாவது சீசன் தொடங்கியுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் தகவல் . . .

(வாய்ஸ் பைட் - செந்தில் 26 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

சிக்கிம் மாநிலத்தில் உள்ள **Teesta** ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக 14 பேர் உயிரிழந்துள்ளனர். 102 பேர் காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்களை மீட்பதற்காக தேசிய பேரிடர் மீட்புப் படையினரின் மூன்று குழுவினர் அங்கு விரைந்துள்ளனர்.

இது தொடர்பாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அம்மாநில முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமாங்-குடன் தெலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையை கேட்டறிந்தார்.

அம்மாநிலத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய வழங்கும் என்றும் பிரதமர் உறுதி அளித்தார்.

**>>>>><<<<<**

ஜப்பானில் இன்று காலை ஆறு புள்ளி ஆறு ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது, **Torishima** கடற்பகுதியில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனையொட்டி, சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது பின்னர் அது விலக்கிக் கொள்ளப்பட்டது.

இதுவரை இந்த நிலநடுக்கத்தால் எந்தவித பாதிப்பும் ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை.

>>>>><<<<<

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் **Hangzhou**-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் பிரிவில் தீபிகா பல்லிக்கல் - ஹரீந்தர் பால்சிங் இணை, மலேசிய இணையை வீழ்த்தி தங்கம் வென்றது.

மகளிர் வில்வித்தை குழுப் பிரிவில். சீன தைபே-யை தோற்கடித்து இந்தியா தங்கம் வென்றது.

இப்போட்டியின் கபடி பிரிவில் இந்தியா 50-27 என்ற புள்ளிக்கணக்கில் சீன தைபே-யை வென்றது.

பேட்மிண்டன் பிரிவில் எச்.எஸ். பிரணாய் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். பி.வி. சிந்து காலிறுதியில் தோல்வியடைந்தார்.

மகளிர் ஹாக்கி அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா – சீனாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 20 தங்கம், 31 வெள்ளி, 32 வெண்கலப்பதக்கம் என மொத்தம் 83 பதக்கங்களுடன் தொடர்ந்து 4வது இடத்தில் உள்ளது.

>>>>><<<<<

உலக கோப்பை கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா உட்பட 10 நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

சென்னை, பெங்களூரு, தில்லி உள்ளிட்ட 10 நகரங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன.

இறுதிப்போட்டி அடுத்த மாதம் 19-ஆம் தேதி நடைபெறுகிறது.

இன்று நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து – நியூஸிலாந்தை எதிர்கொள்கிறது.

அஹமதாபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி பிற்பகல் 2 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>END<<<<<